மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அவர்கள் தாராளமாகப் பேசலாம், அதன் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது, எனவே உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மின் பங்கீட்டுப்பிரிவு, கன்னியாகுமரி.

*290. **வின—திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மின் திட்டத்திலிருந்து வள்ளியூர், நாகர்கோவிலாகிய இரு மின் கோட்டங்களையும் பிரித்து கன்னியாகுமரி மின் திட்டம் என்ற பெயரில் ஒரு பிரிவு நாகர்கோவிலை தலைமை இடமாக கொண்டு நிறுவ செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிசிலனையில் உள்ளது.

திரு. ஏ. பாலையா : கன்னியாகுமரி மாவட்டத்தைத் தனி மின்திட்ட மாவட்டமாக 1971-72-க்குள் நிறுவ அரசு முயலுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத்தான் சொன்னேன் பரிசிலனை யில் இருக்கிறது என்று.

கோவை முன்னுள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம்.

*291 **வின—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, முன்னுள் ராணுவத்தினருக்கான மோட்டார் போக்கு வரத்துக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து 7—7—1971 நாள் அளவில் அரசுக்கு முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பேருந்து அதிபர் ஒருவர் 10 பேருந்து அனுமதிச் சீட்டுகள் வரை தான் வைத்திருக்கலாம் என மேல் வரம்பு வரையறுக்கும் 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத் தின் விதித்துறைகளிலிருந்து முன்னுள் படையினரின் மோட்டார் போக்கு வரத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்க வேண்டுமெனச் சங்கம் கோரியது. இந்த கோரிக்கை அரசால் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு மறுக்கப் பட்டது. அவ்வண்ணமே சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள சிற்பிகள்

*292 **வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச் சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலம் முழுவதும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதி கள் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்கு தொழில் நிமித்தம் கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?